CM விஜய் வாய்திறக்காதது ஏன்?

TVK வா..இல்லை..! DVK வா..! (ட்ரக்ஸ் வெற்றிக் கழகமா)?

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் கேள்வி!

சென்னை, அக்.21-

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் நேற்று முன்தினம், சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர் களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

தமிழ்நாட்டில் த.வெ.க. கட்சியினுடைய நிர்வாகியாக இருக்கக்கூடிய நாகப்பட்டினத் தைச் சேர்ந்த பூபாலன் என்பவரிடமிருந்து 137 கிலோ மெத்தபெட்டமைன் பறிமுதல் செய்யப்பட்டது என்று அதிகாரப்பூர்வமாக 18.10.2026 அன்று ஒன்றிய அரசு சார்பாக அதிகாரப்பூர்வ அறிக்கை வெளியிடப்பட்டி ருக்கிறது. இது பப்ளிக் இன்பார்மேஷன் பியூ ரோவுடைய (PIB) வலைதளத்திலேயும் பதி விடப்பட்டிருக்கிறது. ஒன்றிய நிதி அமைச்ச கத்திடமிருந்தும் அறிக்கை வரப்பெற்றிருக் கிறது.. இந்த குற்றச் சம்பவம் நடைபெற்றது வந்து கடந்த மூன்று நாட்களுக்கு முன்பே எல்லா ஊடகங்களிலும் செய்தித்தாள்களி லும் வந்திருக்கு. அவங்களை கைது பண்ண செய்தியும் எல்லாம் போட்டிருக் கிறோம்.

ஆனால், இதுவரைக்கும் தமிழ்நாடு அர சின் சார்பாக யாரும் வாய் திறந்து பேசவே இல்லை. காவல்துறை இது குறித்து எந்த ஒரு அறிக்கையும் வெளியிடல. மாநில அரசு ஒன்று இருக்கிறதா? மாநில காவல்துறை ஒன்று இருக்கிறதா? தமிழ்நாட்டினுடைய காவல்துறை தூங்குகிறதா? என்ற கேள்வி தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் இருக்கிறது. தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர் கள் அரசியல் இயக்கத்தை தொடங்கின கொஞ்ச காலகட்டத்திலேயே அரசியல் அதி காரம் பெற வேண்டும் என்ற ஒரு வேட்கை யோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி யின் மீது பல குற்றங்களை, பழிகளைச் சுமத்தினார். நான் வந்து அரசியலுக்குள்ள போக விரும்பல. இந்த குற்றச் சம்பவத்தை அரசியல் ஆக்குவது த.வெ.க. போல தி.மு.க. செய்யாது.

முகத்துக்கு ஓட்டு!

ஆனால், அதே சமயத்தில் அன்று தமிழ் நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த எங்களுடைய கழகத் தலைவரை பார்த்து பல கேள்விகளை வாய் திறந்து கேட்ட முத லமைச்சர் விஜய் அவர்களே! இப்போது நீங் கள் வாய் திறக்காததற்கான காரணம் என்ன? இதுதான் நாட்டு மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய மிகப்பெரிய ஒரு கேள்வி. இவருடைய துறையை வந்து அலாக்கேட் (Allocate) பண்றார். டெலிகேட் (Delegate) பண்ணி கொடுக்கிறார். சார், உங்க முகத் துக்குத் தாங்க சார் ஓட்டு போட்டுருக்காங்க நாட்டு மக்கள் எல்லாம். உங்களுடைய அமைச்சர்களே ஆய்வுக்குப் போற இடத்துல எல்லாம் என்ன கேட்டாங்க? போர் சோர் எஸ்டேட்ல இருக்கக்கூடிய மீனவர்கள் கேட்ட கேள்விக்கு? எனக்கா ஓட்டு போட் டீங்க? அவர் முகத்துக்குத்தானே பார்த்து ஓட்டு போட்டீங்க? என்று ஒரு அமைச்சர் களே சொல்றாங்க.

உங்க முகத்துக்காக போட்ட ஓட்டு, நீங் கள் வந்து வாய் திறந்து மக்கள் முன்னாடி வந்து பேசலன்னா அது என்ன அர்த்தம்? அது "ரோம் நகரம் தீப்பற்றி எரிகிற போது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையா தான்" இன்றைக்கு நாடே பற்றி எறிந்து கொண்டிருக்கிறது. ஆனா, பற்றி எரிந்திருக் கிற நாட்டுக்கு முன்னாடி வந்து முதலமைச் சர் வந்து எந்த ஒரு பதிலும் சொல்லல. நீங் கள் வந்து ஆன்டி நார்காட்டிக் டாஸ்க் போர்ஸ் (Anti Narcotics Task Force) அப்படின்னு ஒன்னு உருவாக்குனீங்க. 65 படை கொண்டு, அது தூங்குறதா? அதுக்கு 264 கோடி ரூபாய் நீங்கள் நிதி ஒதுக்கீடு செய் தீங்க; அதை செலவு செஞ்சீங்களா? இந்த ஆன்டி நார்காட்டிக் டாஸ்க் போர்ஸ் எத்தனை முறை உங்கள் தலைமையில் கூடியது? என்னென்ன நடவடிக்கை எடுத்தது? இதெல் லாம் பொதுவெளிகளில் நீங்கள் இதுவரைக் கும் கொடுத்திருக்கிறீர்களா?

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த மாதிரி வந்து போதைப்பொருளைத் தடுப்பதற்காக ரெண்டு, மூணு ஆபரேஷன் கண்டக்ட் பண்ணோம். டிஜிபி தலைமை யில ஆபரேஷன் நம்பர் 2.0 போற வரைக் கும் ஏற்கனவே சைலேந்திர பாபு டிஜிபியா இருந்தபோது ஒரு முறை, சங்கர் ஜிவால் டிஜிபியா இருக்கும்போது இன்னொரு முறை, இந்த மாதிரியான ஆபரேஷன் நீங் கள் எடுத்துருக்கீங்களா? இன்னும் சொல் லப்போனா, ஒரு தனியார் கல்லூரிக்குள்ள வளாகத்துக்குள்ளவே போய் மிகப்பெரிய ஒரு சர்ச் மேற்கொண்டோம். அது உங்க ளுக்கெல்லாம் தெரியும்.

மக்களுக்கு துரோகம்!

இவ்வளவு சம்பவங்கள் எல்லாம் நடக் குது. நான் ஏன் இந்த பத்திரிகையாளர் கூட் டத்தை கூட்டி இருக்கேன்னா, இவ்வளவு சம்பவங்கள் நடந்த போது கூட, இன் னைக்கு எந்த ஒரு பிரிண்ட் மீடியாவிலும் பெரும்பான்மையா நேற்றைக்கு ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த அறிக்கை வெளியிடப்படல; அதைப் பற்றி பேசப்படல; எந்த ஊடகங்களும் இதைப் பெருசா விவாதிக்கல. இதனால நாங்க கவ லைப்பட்டு கூப்பிடல. ஜனநாயகத்தில் நான் காவது தூணாக இருக்கக்கூடிய பத்திரிகை துறை ஏன் மௌனமா இருக்கீங்க? ஆளுங் கிற அரசாங்கத்திற்கு பயமா? அவர்களுக்கு துணை போவது என்பது தமிழ்நாட்டு மக்க ளுக்கு நீங்கள் செய்கிற துரோகம்!

தி.மு.க. ஆட்சியில் இருக்கும்போது இதே மாதிரி ஒரு சம்பவம் நடந்தது. ஒரு நபரை குறிப்பிட்டு, அவர் எங்க தலைவரோட போட்டோ எடுத்துக்கிட்டாரு, எங்களுடைய இளைஞரணியோட செயலாளரோட போட்டோ எடுத்துக்கிட்டாரு என்ற ஒரு கார ணத்துக்காகவே பெரிய நரேட்டிவ் (Narrative) செட் பண்ணாங்க நாட்டுல. நீங் கள்ன்னா உங்களைப் சொல்லல, உங் களை மாதிரி பல பல பேர் வந்து போட்டோ எடுத்துப்பாங்க. ஆனா, அதை வச்சு என்ன பேசுனீங்க? இந்த பணமெல்லாம் திமுக வுக்கு வந்திருக்கு, தி.மு.க. இதை வச்சுதான் தேர்தலை சந்திக்குது, தி.மு.க. கட்சி அரசி யல் நடத்துறதே அதை வச்சுதான் என்றது மாதிரி ஒரு மோசமான, ஒரு கேவலமான அரசியலை சித்தரிச்சீங்க.

அந்த மாதிரி நான் சித்தரிக்க விரும்பல. நாகரிகமான இயக்கத்திலிருந்து இருக்கக் கூடியவன் நான். நாங்கல்லாம் இந்த காசெல்லாம் தவெக.வுக்கு போச்சா? த.வெ.க. தேர்தல் இடைத்தேர்தலுக்கு இது செலவு பண்ணுச்சா? என்ற அளவுக்கு கீழ்த் தனமான அரசியல் பண்ண நான் விரும் பல. ஆனால், தவெகாவினுடைய நிர்வாகி கள் சம்பந்தப்பட்டிருக்காங்க. இதுல நம்பர் ஒன் குற்றவாளியே வந்து, சந்தேகத்துக்கு ரியவர் வந்து அமைச்சர் சரத். அவர் த.வெ.க. நிர்வாகி, ஒரு பொருளைப் பயன் படுத்துறாரு. அது வந்து சந்தேகத்துக்குரி யதா இருக்குது.

திருப்பூர் மாவட்டத்தில் 100 கிலோ கஞ்சா பறிமுதல் செஞ்சாங்க. பெரியசாமி, த.வெ.க. நிர்வாகி.

நம்பர் மூன்று, ஈரோடு பவானியில வந்து அருண் என்றவர் 140 கிலோ குட்கா பிடிச்சி ருக்காங்க. அவர் ஏற்கனவே நாலு வருஷம் இம்ப்ரசன்மென்ட்ல (Imprisonment) இருந் தவரு; அவரை ஸ்டேஷன் பெயில்ல விட்டாங்க. த.வெ.க. நிர்வாகி. சங்ககிரியில் இருந்து 12.5 கிலோ கஞ்சாவை பூபதிங்கிற வர்ட்ட இருந்து பறிமுதல் செய்து கைது பண்ணி இருக்காங்க.

மாடியில் கஞ்சா!

வீட்டு மாடியில், நம்ம மாடித் தோட்டம் வைப்போம் காய்கறிகளுக்கு, த.வெ.க. ஆட் சியில்... த.வெ.க. நிர்வாகி வண்ணாரப் பேட்டை யில் வீட்டு மாடியிலேயே கஞ்சா செடி வளர்த்தார் எட்வின் ராஜ்.

ஆகஸ்ட் மாதம் கஞ்சாவும் மெத்தபெட்ட மைன் பொருட்களையும் பாளையங்கோட் டையில் ஆறு பேரை கைது பண்ணீங்க. த.வெ.க. நிர்வாகி.

மதுரையில் குட்கா சம்பந்தமா காசி நாதனை நீங்கள் வந்து கைது பண்ணி இருக்கீங்க. த.வெ.க. நிர்வாகி.

அதுமட்டுமில்லாமல், இதுக்கெல்லாம் உச்சமா வந்து அதிமுகவில் இருந்த முன் னாள் அமைச்சர் விஜயபாஸ்கர், அவரை வந்து குட்கா பாஸ்கர்னுதான் சொல்லு வாங்க எல்லாருமே. அவரை உங்கள் கட் சியில் இணைச்சுக்கிட்டீங்க. எல்லாத்துக் கும் உச்சமா இன்னைக்கு வந்து, 137 கிலோ மெத்தபெட்டமைனை வச்சிருக்கக்கூடிய த.வெ.க. நிர்வாகி பூபாலனை இன்னைக்கு கைது பண்ணி இருக்கீங்க.

இப்ப நான் பட்டியலிட்டது எல்லாம் த.வெ.க. வினுடைய நிர்வாகிகள், தி.மு.க. வினுடைய நிர்வாகிகள் இல்லை. தி.மு.க. ஆட்சியில் குற்றச் சம்பவம் நடைபெற்ற போது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட் டது. ஆனா, யாரோ ஒருத்தர் போட்டோ



எடுத்துக்கிட்டாருன்றதுக்காக அதை தி.மு.க. கூட நரேட்டிவ் செட் பண்ண மாதிரி நான் நரேட்டிவ் செட் பண்ண விரும்பல. ஆனால், இந்த ஆட்சியாளர்களும் ஆளுங்கிற கட்சி யும் பொதுமக்களுக்கு பதில் சொல்ல வேண் டிய ஒரு இடத்தில இருக்கீங்க. நான் படிச்சி ருக்கிறதுல ஒன்பது பேர் எல்லாமே த.வெ.க. நிர்வாகிகள், ஒன்பது குற்றச் சம்பவம் நடந் திருக்கு. அப்போ நார்மலா தமிழ்நாட்டு மக் கள் மத்தியில் இருக்கக்கூடிய ஒரு சந்தேகம் என்னன்னா, இது 'டிவிகே' வா (TVK) இல்ல 'ட்ரக்ஸ் வெற்றி கழகமா' (Drugs Vetri Kazhagam) அப்படின்னுதான் என்னுடைய கேள்வியாக இருக்குது.

நீங்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச் சராக வந்த பிறகு எந்த விஷயத்துக்கும் வாய் திறக்க மாட்டேன்றீங்க. பரவாயில்லை சார், நீங்கள் இளைஞர்களின் ஓட்டை வாங்கி வந்திருக்கீங்க சார். இளம்பெண்க ளின் ஓட்டை வாங்கி வந்திருக்கீங்க சார். ஹானரபிள் சீப் மினிஸ்டர் சார் (Honorable Chief Minister Sir), நீங்கள் ஒரு குடும்பத்தில் இருக்கீங்க. உங்களுக்கும் பையன் இருக் கான், மகன் இருக்கான். நாங்களும் குடும் பத்தில் இருக்கோம். எனக்கும் மகன் இருக் கான். எல்லாரும் காலேஜ் போற வயசுல இருக்கக்கூடிய பிள்ளைங்க. இன்னைக்கு தமிழ்நாட்டினுடைய இளைஞர்கள் எல்லாம் சீரழியறாங்க சார். வெறும் இளைஞர்களை ஓட்டு போடுற இயந்திரமா பார்க்காதீங்க சார். தமிழ்நாட்டினுடைய இளைஞர்களை உங்க மகனா பாருங்க சார்! உங்க மகளா பாருங்க சார்! "நண்பா, நம்பிஸ்" அப்படின் றீங்க.

வெட்கமே இல்லாம நீங்கள் வந்து பொது மக்களை பார்த்து ஹார்ட்டின் (Heart) காட் டுறீங்க, பிளையிங் கிஸ் (Flying Kiss) கொடுக்கிறீங்க. ஒரு முதலமைச்சர் செய்கிற நாகரிகமற்ற செயல் இதெல்லாம்! விட்டு போங்க, நீங்கள் எங்க மேல நாகரிகம் இல் லாத ஆபாச விஷயத்தை எல்லாம் பேசு றீங்க. ஆனா, இதையெல்லாம் சினிமாட்டிக் மெத்தட்ல செய்யக்கூடிய நீங்கள், இளைஞர் கள் சார், பாவம் சார். அவர்களுக்காக கொஞ் சம் வேலை செய்யுங்க சார்! அவர்களுக்காக கோட்டைக்கு வாங்க சார்! அவர்களுக்காக அதிகாரிகளோட உட்காருங்க சார்! அவர்க ளுக்காக கூட டிஜிபியை கூப்பிட்டு விசா ரணை பண்ணுங்க சார்! உங்களை நம்பி ஓட்டு போட்ட இளைஞர்களோ, இளம் பெண் களோ, நீங்கள் வந்து ஏமாத்துறீங்க சார். (You are cheating the youngsters, you are cheating the younger generation, you are cheating the future of Tamil Nadu, you are cheating them).

அவங்க ஓட்டை வாங்கிக்கிட்டு ஏமாத் திட்டு, அவங்க பிரச்சினைக்கு கூட நீங்கள் பதில் சொல்லலன்னா, அப்ப எதுக்கு நீங்கள் முதலமைச்சரா இருக்கீங்க? இதில் வேற மிகப்பெரிய ஒரு மேதாவிகள், தமிழ்நாட்டி னுடைய அமைச்சர்கள் ரெண்டு பேர். நிர் மல் குமார் அவர்களும், பொதுப்பணித் துறை ஆதவ் அர்ஜுனா அவர்களும். இதுல இன்ட்ரஸ்டிங் (Interesting) என்னன்னா, பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர் ஜுனா அவர்களை வந்து பொதுப்பணித் துறை அமைச்சராவும் விளையாட்டுத்துறை அமைச்சராவும் தான் பார்த்துட்டு இருக்கு நாட்டு மக்கள் எல்லாம். அவர் இன்னொரு போர்ட்போலியோ (Portfolio) ஒன்னு வச் சிட்டு இருக்கார் தெரியுமா? சிறு துறை முகங்கள் துறை.

இப்ப இந்த இன்சிடெண்டே (Incident) 137 கிலோ மெத்தபெட்டமைன் நாகப்பட்டி னம் துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக இருந்ததை கண்டுபிடிச்சி ருக்காங்க. சிறு துறைமுகங்கள் உங்க கண்ட்ரோல்ல இருக்கு சார், ஏன் வாய் திறக்க மாட்டீங்க? சட்டசபையில் நீங்கள் வாழ்க்கையே பேசினீர்களா என்னன்னு? தி.மு.க. ஆட்சியில்தான் இந்த போதைப் பொருள் மெத்தபெட்டமைன் எல்லாம் கடத் தப்படுது அப்படின்னு சொல்லிட்டு. ஆனா 2016-ல் பிடிப்பட்டிருக்கு, 2017-ல் பிடிப்பட் டிருக்கு, 2019-ல் பிடிப்பட்டிருக்கு, 2020-ல் பிடிப்பட்டிருக்கு. இதெல்லாம் வந்து தி.மு.க. ஆட்சியா சார்? தி.மு.க. ஆட்சியில் இல் லைன்னு சொல்லல, இருந்தது. இதெல்லாம் ஒரு தொடர் நடவடிக்கை, தொடர் குற்றங் கள். தி.மு.க. ஆட்சியில் அதிகமான அள வுக்கு வழக்கு போட்டிருக்கோம்.

ஒரு உதாரணத்துக்கு, 2019-ல் 28,750 கிலோ கைப்பற்றப்பட்டதுன்னா, 2020-ல் 2,98,678 கிலோ கைப்பற்றப்பட்டது. நீங் கள் கொஞ்சம் கூட கூச்சமே இல்லாம, நிர் மல் குமார், அமைச்சர் நிர்மல் குமார் அவர் களும் ஆதவ் அர்ஜுன் அவர்களும், இந்த குற்றச் சம்பவங்கள் எல்லாம், இந்த 'மெத்த பெட்டமைன்' என்ற ஒரு வார்த்தையே, இந்த பொருளே வந்து இப்ப தி.மு.க. ஆட்சி யில்தான் வந்ததுங்கிற மாதிரி நீங்கள் சொல் றீங்க. இதெல்லாம் வந்து கடந்த அதிமுக ஆட்சியிலிருந்தே இருக்கு. இந்த ஆட்சியில் வந்ததா, அந்த ஆட்சியில் வந்ததான்றதுக் கெல்லாம் நான் லாவணி பேச விரும்பல.

'டிரக்ஸ்' எடு ரீல்ஸ் போடு!

நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறீங்க? ஏன் நீங்கள் டைவர்ட்டிங் பாலிடிக்ஸ் (Diverting Politics) செய்றீங்க? உங்கள் மேல் ஒரு குற்றம் சுமத்துறாங்க, உங்கள் அரசாங்கத்தின் கீழ் இருக்கக்கூடிய, நிர்வா கத்தின் கீழ் இருக்கக்கூடிய ஒரு குற்றச் சம் பவம் கண்டுபிடிக்கப்படுதுன்னா, அதுக்கு பதில் சொல்லுங்க, அதுக்கு விளக்கம் சொல் லுங்க. அதைவிட்டுட்டு நீங்கள் வந்து போன ஆட்சியில் எப்படி நடந்துச்சு, இந்த ஆட்சியில் எப்படி நடந்துச்சுன்னு, அவங்களை வந்து உட்கார வச்சிருக்காங்க. "ஸ்போர்ட்ஸ் எடு, டிரக்ஸ விடு"ன்னுலாம் நீங்கள் ஓடினீங்க. இந்த விளம்பரம் வரும், "ஸ்வீட் எடு, கொண்டாடு"ன்னு. ஆனா, இங்க வந்து "டிரக்ஸ எடு, ரீல்ஸ் போடு"ன்னுதான் இந்த ஆட்சி இருக்குது.

இன்னொரு முக்கியமான விஷயம் என் னன்னா, நீங்கள் வந்து இந்த த.வெ.க. நிர் வாகி எல்லாம் இந்த குற்றச் சம்பவங்கள்ல ஈடுபட்ட காரணத்தினாலதான் நீங்கள் மௌனமா இருக்கீங்க, முதலமைச்சர் வாய் திறக்க மாட்டேங்கிறார், காவல்துறை அவர் கட்டுப்பாட்டில் இருக்குதுங்கிற ஒரு சந்தேகம் இருக்கு. எந்த முதலமைச்சரும் தன் கீழ் இருக்கக்கூடிய டிபார்ட்மென்ட்டை (Depart ment) டெலிகேட் பண்ணது கிடையாது. எனக்கு பதிலா நீங்கள் பதில் சொல்லுங்கன் னுலாம் சொன்னதே கிடையாது. முதல மைச்சர் சட்டமன்றம் இல்லாத நாள்ல வேணா ஒரு மூத்த அமைச்சர்ட்ட கொடுத்து பதில் சொல்ல வைக்கலாம். ஆனா, மொத் தத்துமே பிரிச்சு கொடுத்துட்டு நான் வந்து மௌனமா உட்கார்ந்து இருப்பேன்ற முதல மைச்சர் தமிழ்நாட்டில இல்லவே இல்லை.

ஊமை முதல்வர்!

ஆனால், குறைந்தபட்சம் காவல்துறை மானியத்திலேயும் நீங்கள் ஒழுங்கா பேசல, உள்ளதை பேசல, மக்களுக்கு தேவையான கருத்துக்களை செய்திகளை நீங்கள் கொடுக் கல. ஆனால், இப்போ ஒரு பக்கம் ராஜ்மோ கனுக்கு அலோகேஷன் (Allocation) கொடுக் கிறீங்க, ஒரு பக்கம் ஆதவ் அர்ஜுனாவுக்கு கொடுக்கிறீங்க, ஒரு பக்கம் நிர்மல் குமா ருக்கு கொடுக்கிறீங்க. சார் சிஎம் சார்! அப்ப நீங்கள் என்னதான் சார் வேலை செய் றீங்க? அப்ப உங்களுக்கு என்னதான் வேலை? என்ன வேலை உங்களுக்கு? எதுக்கு அரசாங்கத்தினுடைய வருமானம், உச்சபட்ச வருமானத்தை விட்டு வந்திருக் குன்னு சொல்றீங்க? முதலமைச்சர், உங்க ளுக்கு வருமானம் இருக்கு தெரியும்ல? சட்டமன்ற உறுப்பினரா உங்களுக்கு... நீங்கள் வந்து வருமானத்தை வாங்குறீங்க தெரியும்ல?

மக்கள் வரிப்பணத்திலிருந்து மாசம் மாசம் சம்பளம் வாங்குறீங்களா? மே மாதம்... முதலமைச்சர் ஆட்சிக்கு வந்தது மே மாதம், நீங்கள் உச்சபட்ச நடிகரா இருந்து பல கோடி ரூபாய் இழந்துட்டு வந்தி ருக்கலாம் மிஸ்டர் சீப் மினிஸ்டர்! (Mr. Chief Minister!) பட் யு ஆர் ரிசீவிங் தி காயின்... மணி ஃபிரம் தி பப்ளிக் ரெவென்யு ஃபிரம் பப்ளிக் ரெவென்யு! தமிழ்நாட்டினுடைய மக்களுடைய வரிப்பணத்திலிருந்து ஜீன் மாதத்திலிருந்து உங்களுக்கு சம்பளம் போகுது. நீங்கள் போகிற காரிலிருந்து, நீங் கள் அனுபவிக்கிற எல்லா சலுகையிலும் தமிழ்நாட்டு மக்களுடைய வரிப்பணம். இந்த வரிப்பணத்துக்கு நீங்கள் பதில் சொல் லணும்.

த.வெ.க. நிர்வாகிங்கிறதுக்காக நீங்கள் காப்பாத்துறீங்க, காவல்துறை கை கட்டி வேடிக்கை பார்க்குது. வெட்கமா இல் லையா? தமிழ்நாட்டினுடைய காவல்துறை, ஒரு பெரும்பான்மையான ஒரு அரசாங்கத் திற்கு நீங்கள் பயப்படணும்னு பரவா யில்லை. நீங்கள் அரசாங்கத்திற்கு பயப்பட அவசியம் இல்லை, ஆட்சியாளருக்கு பயப் படணும்னு அவசியம் இல்லை, முதலமைச் சருக்கு பயப்பட அவசியம் இல்லை, மக்க ளுக்கு பயப்படணும்! தமிழ்நாட்டினுடைய காவல்துறை தலைமை அதிகாரியை பார்த்து நான் கேட்கிறேன், தமிழ்நாட்டினு டைய காவல்துறையில் இந்த ஆன்டி டிரக்ஸ் நார்காட்டிக் விங்கை (Anti Drugs Narcotic Wing) கண்ட்ரோல் பண்ற அதிகாரியை பார்த்து நான் கேட்கிறேன், உங்களுக்கு வெட்கம் இல்லையா? நீங்கள் அரசாங்கத் தினுடைய பணத்தில், மக்களுடைய பணத் தில், வரிப்பணத்தில்தான் சம்பளம் வாங்கு றீங்களா?

உங்களுக்கு கொஞ்சமாவது வந்து ஒரு எண்ணம் வரணும் இல்லையா? காவல் துறை அதிகாரிகளா உட்கார்ந்து இருக்கீங்க, உங்க வீட்ல பொண்ணு பிள்ளைங்கல்லாம் இல்லையா? இளைஞர்கள் எல்லாம் இதை வாங்கி பயன்படுத்துறாங்களே, அதை தடுக் கிறதுக்கான எண்ணம் இல்லையா? மக்க ளுடைய வரிப்பணத்தில் சம்பளம் வாங்கு றீங்க, நோகாம இதுக்கு வேலை செய்ய மாட்டீங்களா? முதலமைச்சருக்குன்னா அவ்வளவு பயமா உங்களுக்கு? இல்ல நீங் களும் சினிமா மாதிரி ரீல்ஸ் போட ஆரம்பிச் சிட்டீங்களா? "சிங்கப்பெண்ணே "ன்னு சொல்லி போட்டுட்டு ரீல்ஸ் போடதான் ஆரம் பிச்சது. அந்த சிங்கப்பெண் படை எங்கயா வது எங்களால பார்க்க முடியுதா?

இல்ல இப்போ நான் சொல்லலாம்ல, திமு கவை பார்த்து நீங்கள் பேசுனீங்க, பத்திரி கையில் அப்படியே விவாதம் நடந்தது. அந்த ஒரு குறிப்பிட்ட நபரை பேசி, இந்த பணம் தான் திமுகவுக்கு வந்தது. எங்க ஈடி (ED)? ஏன் ஈடி வரல? எங்க சிபிஐ (CBI)? எல்லாம் பேசுனீங்களே? நான் கேட்கிறேன், இந்த இரண்டு இடைத்தேர்தலுக்கும் இந்த பூபா லனுடைய பணம்தான் கைமாறி இருக்கி றது. இந்த இரண்டு இடைத்தேர்தலுக்கு மட்டுமல்ல, த.வெ.க. அரசியல் கட்சிக்கு இது போன்ற குற்றவாளிகள் பின்னணியில இருந்துதான் பணம் வருது. சிறு துறைமு கங்களை கையில வச்சிருக்கக்கூடிய ஆதவ் அர்ஜுனாவுக்கு இது தொடர்பு இருக்கா இல் லையா? கில்லி சரத் என்கிற ஒரு அமைச்சர் இது போன்ற ஒரு பொருளைப் பயன்படுத் துறார்னா, அப்போ ஃப்ரீ சப்ளை (Free supply) உங்க கட்சிக்காரர்களே கொடுக்கு றாங்களா?

இந்த கேள்விகள் எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் முன்னாடி இருக்கு. இது எல்லாத்துக் கும் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு முத லமைச்சருக்கு இருக்கு, நீங்கள் எஸ்கேப் (Escape) ஆக முடியாது சீப் மினிஸ்டர்! (You can't escape from the public!) நீங்கள் சும்மா அஞ்சு வருஷமா இதே மாதிரி கதையை ஓட்டிரலாம்னு நினைக்காதீங்க. டைம் ஹஸ் கம் டு நோ! (Time has come to know!) இன்னைக்கு இளைஞர்கள் எல்லாம் கொதிச்சு போயிருக்காங்க. உங்களை நம்பி ஓட்டு போட்டாங்க, நான் தயவுசெய்து உங் கள் மூலமா நான் இளைஞர்களை கையெ டுத்து கும்மிட்டு கேட்டுக்கிறேன். நீங்கள் வந்து அவருடைய கொள்கையை பிடிச்சு ஓட்டு போட்டீங்களோ அல்லது அவர் வந்து பெரிய ஒரு மாற்றத்தை தருவார்னு எண்ணி ஓட்டு போட்டீங்களோ, அது ஓகே. ஆனா ஒரு ஈர்ப்பின் காரணமாக ஓட்டு போட்டிருக்கலாம்.

ஆனா, தயவுசெய்து ஓட்டு போட்ட எல் லாமே தவெகாரங்கன்னு நான் சொல்ல மாட்டேன். நீங்கள் கிடையாது. ஜெனரல் பப்ளிக் (General Public), நல்ல படித்தவர் கள், இளைஞர்கள், இளம்பெண்கள், தயவு செய்து மானிட்டர் திஸ் கவர்மெண்ட்!

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்